விலை ரூபா 5/-

# ஐக்கிய தீபம்

Aikiyatheepam

தீபம் 52 | ஐப்பசி - 2002 | பக்கங்கள் 12 | ஒளி 63

### ★ சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்கள்

# கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த

# பொருளாதார திட்டங்களை தீட்டவேண்டும்!

## சதாவதானி கதிரைவேற்பிள்ளை சி. க. கூ. சங்க புதிய கட்டிடத் திறப்புவிழாவில் யாழ். மா சி. க. கூ. சங்க சமாசத்தலைவர் ச. முருகனேசன் அறிவுரை

கிராமிய மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தி அவர்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்தக்கூடிய வகையில் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்கள் திட்டம் தயாரித்து அவற்றை நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும்.

சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்கப் பணிமனை திறப்பு விழாவின் போது சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவரும் யாழ். மாவட்ட கூட்டுறவு சபையின் உப தலைவருமான திரு ச. முருகனேசன் மேற்கண்டவாறு கூறினார்

சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்கத் தலைவர் திரு செ விக்கினேஸ்வரன் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

புதிய பணிமனைக்கட்டிடத்தை சிறப்பு விருந்தினர் திரு. ச. முருகனேசன் சுபநேரத்தில் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்

விழா ஆரம்பமாவதக்கு முன்பாக சங்க அங்கத்தவர் தேவாரத்துடன் சிறப்பு விருந்தினர்களும் கௌரவ விருந்தினர்களும் மங்களவிளக்கேற்றினார்கள்.

ஆசியுரைக்குப் பின் சங்கத்தின் முத்த உறுப்பினர் திரு. அ. துரை சிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார்,



புதிய பணிமனையைத் திறந்து வைத்த திரு. ச. முருகனேசன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவு சங்க சமாசத்தின் தலைவராக நான் பொறுப்பேற்றபின் முதன்முதலாக சதாவதானி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டேன்.

கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும் என்று கூறுவார்கள். அதேபோல் அன்றைய கூட்டத்தில் காரசாரமான வாக்கு வாதங்கள் அங்கத்தவர்கள் மத்தியில் இடம் பெற்றது கூட்டம் தொடர்ந்து நடைபெறக் கூடிய சாத்தியம் தென்படாததால் அம்போது கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக இருந்த எஸ். லிங்கநாதனும், நானும் கூட்டத்தை விட்டு வெளியேறுவோமோ என்று அலோசித்தோம். ஆனால் காரசாரத்துடன் நடந்த கூட்டம் பின்னர் மிகவும் அமைதியான முறையில் நடந்தது. அங்கே தான் நாம் உண்மையான

( 12-ம் பக்கம் பார்க்க )

### உள்ளே..

* தென்னையைத் தாக்கும் செவ்வண்டை கட்டுப்படுத்த ---
* மனிதவள முகாமைத்துவத்தில்...
* நோய்களில் இருந்து பாதுகாக்க
* பொது அறிவு
* தமிழ்இனி - 2000 --
* வெற்றிகரமான முனைவோர்

கூட்டுறவே நாட்டுயர்வு

# தென்னையைத்தாக்கும் செவ்வண்டைக்கட்டுப்படுத்த இலகுவான வழிமுறைகள்.

தென்னந்தோட்டங்களில் ஆபத்தான பீடையாகக் காணப்படும் தென்னை செவ்வண்டை ஒழிக்க 'பெரோமோன்' எனப்படும் கவர்ச்சிப் பொறிகள் நிரந்தரமான தீர்வாக அமையுமா? இவ்வண்டுகள் தென்னைகளை அழித்து நாசமாக்கும் முக்கியமானதொரு பீடையாகும். குறிப்பாக 5-15 வருடங்கள் வயதுடைய இளம் தென்னை மரங்களைப் பாதிக்கும். வளரும் தென்னையின் தண்டுப் பகுதியையே அதிகளவில் அழித்துச் சேதமாக்கும்.

பெரும் நட்டத்தை ஏற்படுத்தும் இவ்வண்டின் சேதத்தை ஆரம்பத்தில் கண்டுபிடிப்பது சிரமமானதாகும். எனவே உகந்த பருவத்தில் இதனைக் கட்டுப்படுத்துவது பெரும் பிரச்சனையாகவிளங்குகின்றது ஆனால் 'பெரோமோன்' பொறிகளைப்பயன்படுத்தி செவ்வண்டை இலகுவாகவும், வினைத்திறனாகவும் கட்டுப்படுத்தலாம். தென்னந்தோட்டங்களில் செவ்வண்டுகளைக் கட்டுப்படுத்துவதில் இப் பொறிகள் பெருமளவில் உதவும் என்பதில் ஐயமில்லை

### செவ்வண்டுகளை எவ்வாறு அடையாளம் காண்பது?

இவ்வண்டுகளை இலகுவாக அடையாளம் காணலாம். சிவப்புக் கபில நிறமான வண்டுகள் 36 மில்லிமீற்றர் (3.6 ச மீ) நீளமானதாகவும் 10 மி.மீ. அகலமானதாகவும் காணப்படும் இதன் தலையில் நீண்ட மூக்கு போன்ற உறுப்பு காணப்படுவது செவ்வண்டிற்கே உரிய ஒரு சிறப்பியல்பாகும். உடலின் நடுப்பகுதியில் மேற்புறமாக கறுப்பு புள்ளிகளையும் காணலாம்.

### வாழ்க்கை வட்டம்

தென்னை மரங்களில் காயம் ஏற்படும் போது வெளியேறும் தாவரச் சாறு நொதிப்பதனால் உருவாகும் மணத்தினால் பெண் வண்டுகள் கவரப்படும், இவ்வாறு கவரப்படும் பெண் வண்டுகள் புதிய காயங்களில் அல்லது மென்மையான இழையங்களைக் கொண்ட தென்னோலைக் காம்புகளில் அல்லது வளரும் நுனிப் பகுதியில் முட்டையிடும் இம்முட்டையிலிருந்து வெளியேறும் குடம்பிகள் நுனிப்பகுதியில் காணப்படும் நார்த் தன்மையான இழையங்களை உண்பதோடு வளரும் மூனைச்கருகே கூட்டமாகக் காணப்படும் குடம்பிகள் 35 மி.மீ. நீளமாக விருத்தியடையும்

இக்குடம்பிகள் கபில நிறமான தலையைக் கொண்டிருப்பதோடு உடலில் கால்கள் இல்லாது, வெண்ணிறமாகக் காணப்படும். 55 நாட்களின் பின்னர் குடம்பிகள் கூட்டுப்புழுவாக மாறும். குடம்பிகள் தென்னை மரக் கழிவுகளைப் பயன்படுத்தி கூடுகளை அமைத்து அதில் கூட்டுப்புழுப் பருவத்தைக் கழிக்கும்.

### சேத அறிகுறிகள்

தாக்கம் தெளிவாகத் தெரியத் தொடங்கிய பின்னரே இப்பீடைமரத்தில் உள்ளது எனநாம் காணலாம். இச்சந்தர்ப்பத்தில், மரத்தில் அங்குல விட்டமுடைய துளைகளையும் அதனைச் சூழ நிறம் மாறிய பகுதிகளையும் காண முடியும். பாதிக்கப்பட்ட மரம் சடுதியாக நோயால் பாதிக்கப்பட்டது போன்று தோற்றமளிக்கும். இச்சமயத்தில் தென்னை வோலைகள் மஞ்சள் நிறமாக மாறி, மரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும். மரத்தின் சேதமடைந்த பகுதிக்குக் கீழ் கூட்டுப் புழுக்களையும் நீங்கள் காணலாம் வளர்ச்சி தடைப்படும். மரத்தில் காணப்படும் துளைகளில் தாவரச்சாறு வெளியேறும். இத்துளையில் காதை வைத்துக் கேட்டால் உள்ளே சத்தத்தைக் கேட்கலாம்.

# மண்வளம்

### கட்டுப்படுத்தல் :

முதலில் பெண் வண்டுகள் மரத்தில் முட்டையிடுவதைத் தவிர்க்க வேண்டும் இதற்கு மரத்தில் காணப்படும் எல்லா துளைகளையும், தென்னை வோலைச் சாம்பில் காணப்படும் சாரங்களையும் சீகரிக்க வேண்டும் இவற்றின் மீது காரைப் பூச வேண்டும். அல்லது பாவிக்கப்பட்ட என்ஜின் ஒயிலைப் பூசலாம். இதனால் இவ்வண்டுகள் முட்டையிடுவதைக் தடுக்கலாம்.

இவ்வண்டின் தாக்கத்தில் இறந்த மரங்கள் காணப்படுமாயின் அதனை இரண்டாகப் பிளந்து எரித்து விடவும் இதனால் குடம்பிகள் அழிக்கப்பட்டு விடும். தோட்டத்தை சுத்தமாக வைத்திருக்கவும்

தாக்கத்தை நேரகாலத்துடன் அவதானித்தால் ஏதாவதொரு தொகுதிப் பூச்சி நாசினியொன்றை பயன்படுத்துவது அவசியமாகும், பாதிக்கப்பட்ட அதாவது துளையுள்ள இடத்திற்கு சில அங்குலங்களுக்கு கீழ் துளையுள்ள இடத்திற்கு சில அங்குலங்களுக்கு கீழ் துளையை ஏற்படுத்தி அத்துளையில் பூச்சி நாசினியைஊற்ற வேண்டும். பூச்சி நாசினியை ஊற்றிய பின் துளையை களிமண் போன்றவற்றால் மூடிவிடவும். ஆனால் தாக்கம் மோசமானதாக மாறிய பின் அதாவது நுனிவாடும் நிலையை அடைந்த பின் பூச்சி நாசினிகளை இடுவதில் எவ்விதமான பயனும் இல்லை. ஏனையமரங்களைப் பாதுகாக்க வேண்டுமாயின் பாதிக்கப்பட்ட மரத்தை வேருடன் பிடுங்கி அதனை மேலே குறிப்பிட்டது போல் இரண்டாகப் பிளந்து எரிக்கவும். இம்மரத்தை வைத்திருப்பதில் பயன் இல்லை.

தென்னை ஆராய்ச்சி நிறுவனம் மொனோகுரோட்டோபொஸ் 60 மு மெற்றாசிஸ்ரொக்ஸ் 25மூ என்பனவற்றை சிபாரிசு செய்துள்ளது. மொனோகுரோட்டோபொஸ் நாசினியில் 10 மி. லீ. மரத்திற்கு ஊற்றவும். இதனை 6 வார இடைவெளியில் மேற்கொள்ளவும். மெற்றாசிஸ்ரொக்சில் 10 மி. லீ. ஐ இரு வாரங்களுக்கொரு தடவை ஊற்றவும்.

குலைகள் உள்ள மரத்தை இவ்வாறு பரிகரிக்கும் போது நாசினிகளைச் செலுத்தி 45 நாட்களின் பின்னரே அதிலுள்ள குலைகளைப் பயன்படுத்த வேண்டும். எப்போதும் உங்கள் பிரதேசத்தில் உள்ள தென்னை பயிர்ச்செய்கை அபிவிருத்தி உத்தியோகத்தரின் ஆலோசனைப்படி செயற்படுவதே மிகவும் சிறப்பானதாகும். மரத்தின் கீழ் எச்சரிக்கைப் பலகையை வைப்பதும் மிக அவசியமாகும்.

( 3 ம் பக்கம் பார்க்க )

# தென்னையைத் தாக்கும்...

( 2 ம் பக்கத் தொடர்ச்சி)

### பெரோமோன் பொறிகள்

ஐந்து ஏக்கருக்கும் அதிகமான விஸ்தீரணமான தென்னந் தோட்டமாயின் பெரோமோன்களைப் பயன்படுத்தி தென்னை செவ்வண்டைக் கட்டுப்படுத்தலாம். ஆனால் சிறிய தோட்டங்களுக்கு இதனைப் பயன்படுத்தும்போது அயலில் உள்ள தோட்டங்களில் காணப்படும் வண்டுகள் உங்கள் தோட்டத்திற்கு வரலாம் 20 வருடங்களை விடக் குறைவான வயதுடைய தோட்டங்களில் இதனை வெற்றிகரமாகப் பயன்படுத்தலாம்.

### பெரோமோன் பொறிகள் என்றால் என்ன ?

பெரும்பாலான செவ்வண்டுகள் நுனியின் உட்பகுதியில் சீவிக்கின்றன. இவை இனக்கலப்பில் ஈடுபட நுனியிலிருந்து வெளியே வருகின்றன. பெண் வண்டுகளை கவர்வதற்காக ஆண் வண்டுகள் பெருஜினோல் ( Ferrugi-neol ) என்னும் பெரோமோனைச் சுரக்கின்றன. இதன் மணத்தினால் பெண் வண்டுகள் கவரப்பட்டு ஆணுடன் இணைகின்றன. இதனை அடிப்படையாகக் கொண்டே இக்கவர்ச்சிப் பொறிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அதாவது ஏதாவதொரு இடத்தில் இப் பெரோமோனை செயற்கையாகத் தயாரித்து வைக்கும்போது அவ்விடத்தை நோக்கி பெண்வண்டுகள் கவரப்படும்.

### பொறிகளை எவ்வாறு தயாரிப்பது?

5 லீற்றர் கொள்ளளவு கொண்ட பிளாஸ்ரிக் வாளியைப் பயன்படுத்தலாம். சிவப்பு நிறத்தால் இவ்வண்டுகள் கவரப்படுவதால், சிவப்பு நிறமான வாளியாக இருப்பின் மிக உகந்தது. இதனைத் தவிர பின்வரும் பொருட்களும் அவசியமாகும்.

1. பிளாஸ்ரிக் அல்லது கண்ணாடியிலான மயிர்த்துளைக்குழாய், இது 00 மைக்ரோ லீற்றர் பெரோமோனைக் கொண்டிருத்தல் வேண்டும்
2. சிறிய பிளாஸ்ரிக் கப் இதில் கருப்புச்சாறு அல்லது தென்னங் கள்ளை வைத்திருக்க வேண்டும். கள்ளு அல்லது கருப்பஞ்சாறு வண்டுகளுக்கான உணவாகும்.

வாளியின் அரைவாசி உயரத்தில் அதனைச்சுற்றிய 4 ச.மீ. விட்டமுள்ள நான்கு துளைகளை இடல் வேண்டும். இதனால் மழை நீரால் வாளி நிரம்புவதைத் தடுக்கலாம். வாளியின் விளிம்புடன் 'பெரோமனை'க் கொண்ட குழாய் இணைத்துக்கட்டிவிடல் வேண்டும். இதே வேளை கரும்புச்சாறு அல்லது கள்ளைக் கொண்ட சிறிய பிளாஸ்ரிக் பாத்திரத்தையும் விளிம்புடன் இணைத்துக் கட்டவும். கண்ணாடிக் குழாயின் மெல்லிய நுனிப்பகுதியை சாதுவாக உடைத்து விடவும். இதன் பின் வாளியை சவர்க்காரக் கரைசல் அல்லது ரீபோல் கலவையால் துளையிடப்பட்ட உயரம் வரை நிரப்பவும்.

வாளியின் விளிம்பிலிருந்து 5 ச.மீ உயரத்தில் அதன் மூடியை மரத்துடன் இணைத்துக்கட்டவும். வாளியை நிலத்திலிருந்து 1 மீற்றர் உயரத்தில் மரத்துடன் இணைத்துக்கட்டிவிடவும், பெரோமனின் வாசனையாலும், உணவினாலும் கவரப்பட்ட வண்டுகள் சவர்க்கார நீரில் விழுந்து இறந்துவிடும்.

உணவாகப்பயன்படுத்தப்படும் கள்ளில் அல்லது கரும்புச்சாற்றில் காபோபியுரானை கலந்து விடவும். இதனால் உணவை உண்டு விட்டு தப்பக்கூடிய வண்டுகளையும் கட்டுப்படுத்தலாம்.

### பொறிகளைப் பராமரித்தல்

இரண்டு வாரங்களுக்கொரு தடவை இறந்த வண்டுகளையும், சவர்க்கார நீரையும் அகற்றிய பின் புதிய சவர்க்காரக் கரைசலால் வாளியை நிரப்பவும். இச்சந்தர்ப்பில் உணவையும் புதுப்பித்தல் வேண்டும் பெரோமனைக் கொண்ட குழாய் 5-6 மாதங்களுக்கொரு தடவை புதுப்பிக்க வேண்டும். ஆனால் சவர்க்கார கரைசலையும், உணவையும் புதுப்பிக்கும் இடைவெளியை வெப்பநிலை, காற்றின் வேகம், வரட்சி, மழை என்பவற்றிற்கேற்ப கூட்டிக் குறைத்துக் கொள்ள முடியும்,

### கவனிக்க வேண்டியவை

பெரோமோன்களை மாத்திரம் பயன்படுத்தி இவ்வண்டைக் கட்டுப்படுத்த முன் மேற்குறிப்பிட்ட அனைத்து முறைகளையும் பின்பற்ற வேண்டும். செவ்வண்டுகளின் தாக்கம் இல்லாதபோது இதனைப் பயன்படுத்த வேண்டாம் அநாவசியமாக இப்பொறியைப்பயன்படுத்தும்போது வேறு தோட்டங்களிலிருந்துவண்டுகள் உங்கள் தோட்டத்திற்கு வரலாம், சிறிய தோட்டங்களுக்கும் உகந்ததல்ல என்பதை கவனிக்கவும். பெரோமோன்களை, பணிப்பாளர், தென்னை ஆராய்ச்சி நிலையம், பண்டிருப்புத் தோட்டம், லுனுவிலை என்னும் முகவரியுடன் தொடர்பு கொண்டு பெறலாம். மொனோகுரோட்டோபொஸ் தடை செய்யப்பட்ட ஒரு நாசினியாகும். உங்கள் பிரதேச தென்னை அபிவிருத்தி அலுவலரிடம் மாத்திரமே இதனை பெறலாம்.

# கவனம் நெல்லுக்கு தத்திகள் வரலாம்

நாட்டின் சில பிரதேசங்களில் தற்போது நிலவும் காலநிலையின் காரணமாக இச்சிறுபோகத்திலும் கபில நிறத் தத்திகளின் தாக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. கபில நிறத் தத்திகள் பொதுவாக பெருமளவான தீங்கை விளைவிக்கும். சில வேளைகளில் முழு விளைச்சலுமே இல்லாது போகலாம் எனவே ஆரம்பத்திலேயே உகந்த தடுப்புக்களை மேற்கொள்வதன் மூலம் சிறந்த பலனைப் பெறலாம்.

உங்கள் நெற்பயிரை அடிக்கடி மிகக்கவனமாக அவதானிக்கவும் பயிரின் அடிப்பகுதியை மெதுவாகத் தட்டும் போது, கபில நிறத்தத்திகள் நீரில் விழுவதை நீங்கள் காணலாம். குறைந்தது பல இடங்களில் அவதானிக்க வேண்டும். வரம்புகளில் நின்று பயிரை அவதானிக்க வேண்டும்.

### தாக்க அறிகுறிகள்

கபில நிறத் தத்திகள் நெற்பயிரின் அடிப்புறம் சீவிப்பதோடு, நெற்பயிரின் சாற்றை உறிஞ்சிக் குடிக்கும் இதனால் பயிர்கள் உலர்ந்து எரிந்தது போன்று தோற்றமளிக்கும். இது தத்தி எரிவு எனப்படும். இத்தத்தி எரிவுகளை வயலில் தொட்டம் தொட்டமாகக் காணலாம்.

### பிழையான அடையாளம் காண வேண்டாம்

விவசாயிகள் இலை மடல் வெளிறல் நோயை தத்தி எரிவு என பிழையாக அடையாளம் கண்டு பங்கசு நாசினிகளை விசிறலாம். அதே போன்று இலை மடல் வெளிறல் நோய்க்கு பங்கசு நாசினியை விசிறலாம்.

எனவே தத்திகள் வயலில் காணப்படுகின்றதை உறுதி செய்து கொண்டு அதன் பின் சிபாரிசு செய்யப்பட்ட நாசினியொன்றை விசிறுவது உகந்ததாகும்.

# மனித வள முகாமைத்துவத்தில் தொழில் விருத்தியின் பங்கு

ஒரு நாட்டின் மனிதவள அபிவிருத்தியுடன் தொடர்புடையதே மனிதவள முகாமைத்துவமாகும். நாட்டின் பௌதிக வளங்களோ பயன்படுத்தப்படும் தோறும் தேய்வடைந்து செல்லும் பண்புடையனவாகவும் அதே நேரம் மனிதவளமோ பயன்படுத்தும் தோறும் பெறுமானம் அதிகரித்துச் செல்லும் வளமாகக் கருதப்படுகின்றது. இத்தகைய மனித வளம் தொடர்பாக நிறுவனங்கள் நான்கு அடிப்படைத் தொழிற்பாடுகளை ஆற்ற வேண்டிய நிலையிலுள்ளன. இதில் இணைத்தல் தொழிற்பாடு என்பது ஆட்களைப் பெற்றுக் கொள்வதுடன் தொடர்புடையதாகவும், அபிவிருத்தித் தொழிற்பாடு என்பது ஆட்களை விருத்தி செய்வதுடன் தொடர்புடையதாகவும் காணப்படுகின்றன. அதே நேரம் தூண்டுதல் தொழிற்பாடு என்பது ஆட்களை உற்சாகப்படுத்துவதுடன் பராமரிப்புத் தொழிற்பாடென்பது பெறப்பட்ட மனித வளத்தை நீண்டகாலம் நிறுவனத்தில் பேணுகின்ற தொழிற்பாடாகவும் அமைந்துள்ளன. எனவே தான் மனிதவள முகாமைத்துவமானது நிறுவனங்களுக்கு தேவைப்படும் மனித வளத்தைப் பெற்றுப் பராமரித்து வரும் ஒரு கருமமாக கொள்ளப்படுகின்றது.

மனிதவள முகாமைத்துவத்திலே அபிவிருத்தித் தொழிற்பாடு (*Development Function*) என்பது மனித வளத்தின் விருத்தியுடன் சம்பந்தப்பட்டதாகும். இதற்குள் வழிகாட்டல் (*Orientation*) பயிற்சியளித்தல் (*Training*) தொழில் விருத்தி (*Career Development*) என்பன அடக்கப்படும் இவை மூன்றும் ஒன்றிலிருந்து விருத்தி பெறுவனவாகும். பயிற்சியளித்தலினூடாக நிறுவனங்கள் கருதத் தொடங்கியுள்ளன. இந்த முதலீடு அதிகரிக்கும் பொழுது மனித வளத்தின் பெறுமானமும் உயர்வடைந்து செல்வதாகக் கொள்ள முடியும். இத்தகைய பயிற்சியளித்தலின் ஊடாக தொழில் விருத்தி ஏற்படுவதனைக் காணமுடியும்.

## 2.0 தொழில் விருத்தி :- (Career Development)

தொழில் (*Career*) என்பது ஒரு நபரின் வாழ்நாளில் பதவிநிலை தொடர்பாக மேற்கொள்ளப்படும் தொடரான நிகழ்வாகும். இது அவரின் தொழிலில் முன்னேற்றம், வெற்றி அல்லது தோல்வி என்பவற்றைக் குறிப்பதாக அமைவதில்லை. சம்பளத்துடன் அல்லது சம்பளமின்றி ஒரு குறிப்பிட்ட கால நீட்சிக்கு மேற்கொள்ளப்படும் எத்தகைய வேலையும் தொழில் எனக் கொள்ளப்படும். பதிலாக தொழில் விருத்தி என்பது மனித வளத்தின் இயல்பான விரிவாக்கம் ஆகும். இது தனி நபரினதும் குடும்பத்தவரதும் நாட்டங்கள் பொறுப்புக்கள் என்பவற்றுடன் இசைந்து செல்லும் இதன் காரணமாக தொழில் விருத்தியானது ஊழியர் ஒருவரின் பதவி சம்பந்தமான அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்டதெனக் கொள்ள முடியும்.

## 2.1 தொழில் ஆலோசனை கூறல் (Career Counselling)

தொழில் ஆலோசனைகூறல் என்பது தொழில் விருத்திக்கான அடிப்படை எனக் கொள்ளப்படுகின்றது. தமது தொழில் எப்படி விருத்தி பெறலாம் என வழங்கப்படும் ஆலோசனை அவன் தனது தொழிலைத் திட்டமிட்டுப் பணியாற்ற உதவுவதாக இருக்கும். குறிப்பாக ஒரே தரத்தில் அமைந்த இரண்டு பதவி உயர்வுகளில் எதனைத் தெரிவு செய்வதென்பது தொழில்விருத்திக்கான வாய்ப்பில் தங்கியுள்ளது. குறிப்பாக கணக்குப் பதிவாளர் அல்லது எழுதுவினைஞர் ஆகிய இரண்டு பதவிகளிலும் தொழில் வழிகாட்டல் அலுவலகம் (*Career Guidence office*) என்பதை அமைத்துள்ளது தொழில் வழிகாட்டலில் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்படும்

## 3.2 தொழிலின நடுப்பகுதி ; (Mid Career)

தொழில் விருத்தி தொடர்பான நடுக்கட்டமாக இது கொள்ளப்படுகின்றது. இக் கட்டத்தில் வேலையில் சேர்ந்து கொண்ட தொழிலாளர் தமது தொழிலின் விருத்தியை வேகமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற விருப்புடன் காணப்படுவர். இக் கட்டத்தில்,

- நிறுவன வேலைகளில் மிக முக்கியமானவற்றைப் பொறுப்பேற்றல்.
- உச்ச உற்பத்தித் திறன் மட்டத்தைக் கொண்டிருத்தல்.
- வேலையில் நிபுணத்துவத்தை (*Expert*) அடைய விரும்புதல்
- வேலைகளுக்கான அங்கீகாரம் (*Recognition*) பெறுதல்
- உச்ச வேலைத் திருப்தியைக் கொண்டிருத்தல்.

போன்ற பண்புகளைத் தொழிலாளர் கொண்டிருப்பது தொழில் நடுப்பகுதி மட்டமாகும்.

## 3.3 தொழிலின் பின்பகுதி : (Late Career)

ஊழியர்களின் தொழில் தொடர்பான கடைசிக் காலப்பகுதி இதுவாகும் தொழிலாவர்கள் வேலையில் இளைப்பாறுவதற்கு முன்னர் கொண்டிருக்கும் விருப்பங்களெல்லாம் தொழிலின் பிற்பகுதியில் அடக்கப்படும்குறிப்பாக,

- வேலையை ஏனையோருக்கு கற்றுக் கொடுத்தல்.
- நிறுவனத்துக்குத் தேவையான தீர்மானங்களை எடுக்க உதவுதல்
- நிறுவனத்துக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குதல்;
- ஓய்வு பெறுவதற்கான மனோநிலையை வளர்த்தல்.
- வேலையின் பின் பணியாற்றுவதற்கான திறனை வழங்கும் சுய விருத்திக்கான வளங்களைத் திரட்டுதல்.
- குறைந்த பணியையும் பொறுப்பையும் ஏற்றல்.
- குறைந்த வசதியுடன் வாழ்வதற்குப் பழகுதல்.

என்கின்ற வகையில் தொழிலின் இறுதிக்காலம் அமைக்கப்படும். இக்கால கட்டத்திலேயே தொழிலின் உச்ச அபிவிருத்தி இருப்பதனை அவதானிக்க முடியும்.

## 4.0 தொழில் விருத்தியின் பயன்கள் :

நிறுவனங்கள் ஊழியர்களுக்கிடையே தொழில் விருத்திக்கான வாய்ப்பை வழங்குமாயின் அது பல வகையான நன்மைகளைப் பெற்றுத் தரும்.

- ஊழியர்களிடையே தலைமைத்துவப் பண்புகளை வளர்க்கும்,

(10ம் பக்கம் பார்க்க)

## சுகவளம்

# நோய்களில் இருந்து பாதுகாக்கும் தாய்ப்பால்

ஒரு தாய், தான் பெற்ற குழந்தைக்கு தனது இரத்தத்தையே பாலாக்கி ஊட்டுகிறாள்; அதனோடு பாசத்தையும் சேர்த்துத்தான்.

தாய் ஊட்டும் பால் குழந்தையின் பசியைப் போக்க மட்டுமல்ல, நோய்களிலிருந்து குழந்தையைப் பாதுகாக்கவும் பயன்படுகிறது.

ஆனால் அண்மைக்காலமாக தாய்ப்பாலின் முக்கியத்துவம் உணரப்படவில்லை. பெற்ற குழந்தைக்கு தனது பாலை தாய்மார்கள் ஊட்ட மறுப்பதால் உலகம் முழுவதும் இன்று கோடிக்கணக்கான குழந்தைகள் சத்துக்குறைவால் அவதிப்பட்டு வருவதாக உலக சுகாதார நிறுவன புள்ளி விபரங்களைப் பார்த்த பின்பு புரிந்து கொண்டிருந்தாலும் அது காலம் கடந்த அறிவேயாகும்.

குழந்தைகளுக்கு பாலூட்ட தாய்மார்கள் மறுப்பதற்கு பல காரணங்களை ஏற்படுத்திக் கொண்டாலும், அதில் கேடு கெட்ட காரணமாக கருதப்படுவது தங்கள் அழகும் இளமையும் கெட்டு விடும் என்று பெண்கள் அஞ்சுவது தான். பல பன்னாட்டு குழந்தை உணவு நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புக்கள் குழந்தைகளை, கொழுகொழு குழந்தைகளாக ஊட்டம் நிறைந்த சுறுசுறுப்பான குழந்தைகளாக மாற்றி விடும் என்று கவர்ச்சிகரமாக விளம்பரங்கள் செய்வதை பெண்கள் மிகச் சுலபமாக நம்புகின்றனர் என ஒரு ஆய்வு கூறுகிறது.

தாய்ப்பாலை விட குழந்தை உணவுகள் தங்கள் குழந்தைகளின் உடல் நலனுக்கு ஏற்றது என்கிற கண்மூடித்தனமான நம்பிக்கை தான் குழந்தை உணவு வகைகளில் தாய்மார்கள் சரணாகதி அடைந்ததற்கான காரணம் என்பது இப்போது தெரிய வந்துள்ளது.

* வளரும் குழந்தைகளுக்கு முழு போஷாக்கு
* இரண்டு கப் கொடுத்தால் போதும், வேறு எதுவும் தேவையில்லை !
* ஜீனியர்களுக்கான பிரத்தியேக தயாரிப்பு

என, பல நிறுவனங்கள் செய்யும் கவர்சியான விளமபரங்களாலேயே இன்று உலகம் முழுதும் கோடிக்கணக்கல் குழந்தைகள் சத்துக்குறைவால் வாடுகிறார்கள்.

இன்னும் ஒரு கொடுமையான தகவலையும் உபயோகமற்ற இந்த உலக சுகாதார நிறுவனம் தருகிறது அதாவது 30 நொடிகளுக்கு ஒரு குழந்தை வீதம் தாய்ப்பால் மறுக்கப்படுவதால் சாகடிக்கப்படுகிறதாம்

குடிப்பதற்கு சுத்தமான தண்ணீரே கிடைக்காத போது அந்த தண்ணீரில் கரைத்து கொடுக்கப்படும் குழந்தை உணவு பச்சிளங் குழந்தைகளின் பஞ்சு போன்ற குடலுக்கு ஒத்துக்கொள்ளாமல் பேதியாகி அந்த பேதிக்கு மருந்து கொடுக்கப் பேரய் குழந்தையின் உயிரையே பறித்து விடுகிறது.

1983ல் தாய்ப்பால் பதிலி குறித் தேசிய சட்டம் பல்வேறு நாடுகளை போலவே இந்தியாவிலும் நிறைவேற்றப்பட்டது. அதன் மூலம் தாய்ப்பாலுக்கு மாற்றான குழந்தை உணவுகளுக்கு தடை விதிக்கப்பட்டது அந்த சட்டம் ஏட்டளவில் இருந்ததே தவிர அது செயல்படுத்தப்படவில்லை.

குழந்தை உணவுகளை ஒழுங்கு படுத்தும் நியதியினை 1981 ல் உலக சுகாதார நிறுவனம் தயாரித்து பிரகடனப்படுத்தியது.

அதன் மூலம் பிரசவ மருத்துவ மனைகளிலும், பிரசவ விடுதிகளிலும் இலவசமாக குழந்தையுணவு அளிக்கக் கூடாது; அது சம்பந்தமான எல்லா விளம்பரங்களிலும் தாய்ப்பால் தான் சிறந்தது என குறிப்பிட வேண்டும் என்பது அதன் மூலம் வற்புறுத்தப் பட்டது.

பன்னாட்டுநிறுவனமான நெஸ்லே முதற்கொண்டு நம் நாட்டில் தயாராகும் குழந்தை உணவான அமுல் வரை டின்களில் கண்ணுக்குத் தெரியாமல் ஒரு மூலையில் தாய்ப்பாலுக்கு ஈடில்லை' என்கிற வாசகம் பொறிக்கப்பட்டது.

குழந்தைகளுக்கான உணவுப் பொருட்கள்என்கிற விளம்பரத்துடன் விற்பனை செய்யப்பட்டு வரும் பொருட்கள் இன்று நோய் உருவாக்கும் பொருட்களாக மாறியுள்ளன

நாகரீகம் என்ற பெயரால் இன்று வந்திருக்கிற இன்னும் பிற ஆபத்தான பொருட்களும் குழந்தைப் பராமரிப்பு என்ற பெயரிலும ஊடுருவியுள்ளன. பல பன்னாட்டுநிறுவனங்கள்குழந்தைகளுக்கான உணவை தயாரித்து விற்பதோடு சோப்பு, பவுடர், குழந்தைகளுக்கான எண்ணெய் என தயாரித்து முழுமூச்சுடன் விளம்பரப்படுத்தி விற்பனை செய்து கொள்ளை லாபமடிக்கின்றன.

பாமரர்கள் முதல் படித்தவர்கள் வரை இன்று இந்த எண்ணெய்யை வாங்கி தங்கள் குழந்தைகளுக்கு மசாஜ் செய்து வருகிறார்கள். அதற்காக பெரும் தொகையைச் செலவிடவும் தயங்குவதில்லை.

( 9ம் பக்கம் பார்க்க )

## உயிர் கொல்லி எய்ட்ஸிற்கும் மருந்து உண்டு

உலகில் தற்போதுள்ள நோய்களில் 'எயிட்ஸ்' உலகை ஆட்டிப் படைக்கும் கொடிய உயிர்கொல்லி நோயாக உள்ளது. மருந்துகள் எவற்றாலும் குணப்படுத்தப்பட முடியாத ஒரு நோயாக இந்நோய் உள்ளது.

ஆனால் இந்த கொடிய நோய்க்குத் தன்னிடம் மருந்து இருப்பதாக சென்னை ஆர்க்காடு சாலையில் உள்ள (வட பழனி பஸ் நிலையம் முன்பாக) வடபழனி சித்தர் ஒருவர் ''நவபாஷாணம்'' மூலம் தயாரிக்கப்படும் ஒருவகை மருந்தின் மூலம் எய்ட்ஸ் நோயைக்கட்டுப்படுத்தலாம் என்று கூறுகிறார் இந்தச்சித்தர்.

இதே போல், சக்கரைநோய், இருதயநோய், சிறுநீரகக்கோளாறு அல்சர் போன்ற நோய்களையும் குணப்படுத்துவதற்குரிய மருந்துகள் தன்னிடம் இருப்பதாகவும் இவர் கூறுகிறார்.

இவர் தயாரித்துள்ள 'வனபுஷ்ப தைலத்தின் மூலம் வெள்ளை முடியை கறுத்த முடியாக மாற்றலாம் என்றும் பெண்களுக்கு நீண்ட முடி வளர்வதற்கும், வழுக்கைத் தலையிலும் முடி வளரக் கூடியதாகவும் இருக்குமாம்;

பத்து வயதில் இருந்து மருத்துவத்தைத் தன்னுடைய மூதாதையர்களிடம் இருந்து கற்றுக்கொண்டதாகக் கூறும் வடபழனி சித்தர் சென்னை குரோம் பேட்டைக்கு அருகிலுள்ள அஸ்தினாபுரத்தில் கோயில் கட்டி பாதரசத்தினால் சிவலிங்க வழிபாடு நடத்தி வருகிறார்.

# பொது அறிவு GENERAL KNOWLEDGE

- INC - சர்வதேச நீதிமன்றம்
- ILO - சர்வதேச தொழிலாளர் அமையம்
- IMF - சர்வதேச நிதி நிறுவனம்
- IAEI - சர்வதேச அணுசக்தி முகவர் நிலையம்
- IDA - சர்வதேச அபிவிருத்திச் சங்கம்
- IMC - சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம்
- ICAO - சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமையம்
- UNISEF - சர்வதேச குழந்தைகள் நிதியம்
- WHO - உலக சுகாதார நிறுவனம்
- WIPO , உலக புத்திஜீவிகள் அமையம்
- WCC - உலக திருச்சபைகள் அமையம்
- ECM - ஐரோப்பிய பொதுச்சந்தை
- ESA - ஐரோப்பிய நாடுகளின் விண்வெளி ஆராய்ச்சி தாபனம்
- UNESCO - ஐக்கியநாட்டு கல்விவிஞ்ஞான கலாசார அமையம்
- OPEC - பெற்றோல் ஏற்றுமதிநாடுகளின் அமையம்
- OAV - ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனம்
- ESRO - ஐரோப்பிய விண்வெளி ஏஜென்சி
- UNHCR - ஐக்கிய நாடுகளின் அநாதைகள் ஸ்தாபனம்
- இன்ரபோல் - சர்வதேச பொலிஸ் நிறுவனம்
- ஸ்கொட்லாண்ட் யாட் - பிரித்தானிய விசேட துப்புத் துலக்கும் அமைப்பு
- CIA - அமெரிக்க மத்திய உளவு ஸ்தாபனம்
- RAW - இந்திய ஆராய்ச்சி தொகுப்புப்பிரிவு
- SAARC - தெற்காசிய பிராந்திய கூட்டமைப்பு
- ANC - ஆபிரிக்க தேசிய இயக்கம்
- PLD பாலஸ்தீன விடுதலை இயக்கம்
- VOA - அமெரிக்க வானொலி நிலையம்
- சித்பெற் - இஸ்ரேலின் இரகசிய சேவை
- NATO வட அத்திலாந்திக் இராணுவ ஒப்பந்த கூட்டமைப்பு
- WTO • உலக வர்த்தக நிலையம்
- ICRC - சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்

## சிரிப்பின் கோலங்கள்

- அருளுக்கு சிரிப்பவன் - அன்பாளன்
- இடம்பார்த்து சிரிப்பவன் - எத்தன்
- இருக்குமிடமெல்லாம் சிரிப்பவன் - கோமாளி
- இன்பத்தில் சிரிப்பவன் - ஏமாளி
- ஓயாமல் சிரிப்பவன் - பைத்தியகாரன்
- ஓடவிட்டு சிரிப்பவன் - வஞ்சகன்
- கண்பார்த்துச் சிரிப்பவன் - காரியவாதி
- காணாது சிரிப்பவன் - கஞ்சன்
- குழைந்துசிரிப்பவன் - சந்தர்ப்பவாதி
- கூட்டத்தில் சிரிப்பவன் - சாமர்த்தியசாலி
- கொடுக்கும் போது சிரிப்பவன் - சூழ்ச்சிக்காரன்
- கோலத்தில் சிரிப்பவன் - சிந்தனையாளன்
- மகிமையில் சிரிப்பவன் - மன்னன்
- மாலையில் சிரிப்பவன் - பண்பாளன்
- மோகத்தில் சிரிப்பவன் - வெறியன்
- நிறையோடு சிரிப்பவன் - அறிஞன்
- நின்று சிரிப்பவன் - நிறையுள்ளவன்
- நீதியோடு சிரிப்பவன் - அறிஞன்
- செயல் கேட்டுசிரிப்பவன் - பச்சோந்தி
- வளையாமல் சிரிப்பவன் - உதவாக்கரை
- தெரியுமென்றுசிரிப்பவன் - பசப்புக்காரன்
- தெரியாது என்று சிரிப்பவன் - நடிகன்

தொகுப்பு :- தர்மிஷா

## நம் மனதில் நிறுத்த வேண்டிய பழமொழிகளும் நாடுகளும்

- நாணயம் ஒன்றுதான் மதிப்புள்ள நாணயம் - சீனா
- நேர்பாதையில் செல்பவன் வழி தவறியதில்லை - இந்தியா
- உழைப்பவனுக்கு வெகுமதி விதைப்பவனுக்கு அறுவடை - இந்தியா
- மதமில்லாத மனிதன் கடிவாளமில்லாத குதிரை மாதிரி - இத்தாலி
- வாய் அரை வைத்தியன் - இந்தியா
- நல்ல எஜமான் நல்ல சேவகன் - அரேபியா
- உத்தியோகத்தை விட வியாபாரம் மேலானது - இங்கிலாந்து
- மனிதர்கள் மேல் அன்பு செலுத்துவதே உண்மையான மதம் - இந்தியா
- ஆசையில்லாத மனிதன் ஆதாம் மகனல்ல - பாரசீகம்
- பலவீனமானவனுக்குச் சீக்கிரம் கோபம் வரும் - இந்தியா

தொகுப்பு : திரு வ காந்திமதிநாதன்
கல்வி உத்தியோகத்தர்
கட். நெல்லியடி பல நோ. கூ. சங்கம்

# "தமிழ்இனி - 2000" விபரண ஒளி, ஒலி, நாடா வெளியீடு

சென்னை மாநகரில் புலமைப் பித்தன் அரங்கில் எழுத்தாளர்கள் மாநாடு ஒன்று நடைபெற்றது. இம் மாநாட்டில்பலநாடுகளையும் சேர்ந்த பல்துறை அறிஞர்கள், கலைஞர்கள், கல்விமான்கள் என பலதரப்பட்டவரீகள் கலந்து கொண்டார்கள். மாநாட்டு மேடையில் மாநாட்டின் நோக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் ''விட்டு விடுதலையாகி நிற்பாய்'' என்ற புரட்சிக் கவி பாரதியின் வாசகங்கள் பொறிக்கப்பட்டிருந்தது'' இந்த மாநாட்டு நிகழ்ச்சிகளை கண்ணன், சேரன் ஆகியோர் தொகுத்து ஒளிநாடாவில் பதித்து வெளியீடு செய்திருந்தனர்.

இந்த ஒளிப்பதிவுநாடா வெளியீட்டினை கட்டைவேலி - நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கலாசார கூட்டுறவுப் பெருமன்றம் கூட்டுறவாளர்கள், கலைசார்ஆர்வலர்கள் இயக்குநர்கள், பணியாளர்கள் பார்ப்பதற்கு அண்மையில் சங்க மண்டபத்தில் ஒழுங்கு செய்திருந்தனர்.

எழுத்தாளர் சேரன் அவர்கள் அதன் தொடக்க உரையில் (அரசியல் மதம், இனம்) எவரையும் நாடாத வகையிலும், சாராத வகையிலும் இருப்பதன் நிலைப்பாட்டையும் பற்றி வலியுறுத்தினார். தொடர்ந்து ஆரூர் கோபாலகிருஷ்ணர் அவர்களில் குறிப்பின் பின் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் எந்தக் கருத்தும் அதன் மூல மொழியிலேயே இலகுவாக விளங்கும் எனக் கூறினார்.

இலங்கையைச் சேர்ந்த கனடாவில் வாழும் கரவெட்டி பார்வதி கந்தசாமி அவர்களும் சிங்கப்பூரில் வாழும் திரு. அரவிந்தன் அவர்களும் புலம்பெயர்ந்த இலங்கைத்தமிழரின் நிலை பற்றி எடுத்துக்கூறினார்கள். சுந்தர ராமசாமி அவர்கள் காலத்தின் தேவைக்கேற்ப தாண்டிச்செல்ல வேண்டியது பற்றியும் ''பழையன கழிதலும் புதியன புகுதலும்'' பற்றி விபரித்தார். திரு. எஸ். இராமகிருஷ்ணன் சுஜாத்தா ஆகியோர் கதைகள் பற்றிய குறிப்புக்களைத் தெளிவுபடுத்தினார்கள். திரு. பிரபஞ்சம் அவர்கள் குடும்ப வாழ்க்கை சில வார்த்தைகளிலேயே அடங்கும் என்ற கருத்தை உதாரணம் மூலம் முன் வைத்தார். பொம்மலாட்டிகளுடன் பெண்கள் கதைப்பது கௌரவக் குறைவாகவும் ஆண்கள் கதைப்பது பண்பாட்டு தேய்வாக உள்ளதையும் குறிப்பிட்டார்.

அசோகமித்திரன் சிறு கதைகள் பற்றியும் பிறேம் அவர்கள் பக்தி ஆய்வு பற்றியும் குறிப்பிட்டார்கள். வாசிப்புப் பற்றி விபரித்த வெங்கடாகலபதி, ஸ்ரீபன், மாலன் ஆகியோரில் மாலன் அவர்கள் நம்மில் பலர் புத்தக அலுமாரிக்கு கிட்ட செல்லாமலும் அதனை முகர்ந்து கூடப் பார்க்காமலும் பார்க்க விடாமலும் இருக்கிறோம். என அங்கலாய்த்தார். மலேசியாவைச் சேர்ந்த சபாபதி அவர்கள் அங்கு விடுதலைக்கு முன்னும் பின்னும் இலக்கிய வளர்ச்சியின் தன்மைகளை ஆராய்ந்தார்.

ஆர். கார்த்திகேசு அவர்கள் சீனர்கள் மத்தியில் தமிழ் இலக்கியம் பற்றி எடுத்துக் கூறினார். இராசேந்திர சோழன் அவர்கள் மார்க்சிய இலக்கியம் பற்றியும் வீ. அரசு அவர்கள் கம்யூனியீச நோக்கு பற்றியும் எடுத்துக்கூறினார்கள் மலேசியாவைச் சேர்ந்த பீர். முகமது அவர்கள் தங்களின் படைப்புகளுக்கு உரிய கௌரவம் தரப்படுவதில்லை எனக் குறைப்பட்டுக் கொண்டார். சாரல் நாடன் எம். பௌசர் அவர்கள் எதிர்ப்பு இயக்கம் பற்றியும் அருள்மொழி அவர்கள் எதிர்ப்பு புதிய வருணாச்சிரமம் பற்றி த. பஞ்சாங்கம் அவர்கள் படைப்புக்கள் பற்றிய கோட்பாடுகள் பற்றியும் அ. இராமசாமி அவர்கள் இலக்கியம் பற்றியும் எஸ். வி. இராசதுரை அவர்கள் கல்வியினதும், அதன் புறம்போக்கு, ஜனநாயகத்தன்மை பற்றியும் எடுத்து விளக்கினார்கள்.

இடையே தென்னாலிராமன் நாடகக் காட்சியும் இடம்பெற்றது. நாவிதன் ஒருவனை தென்னாலிராமன் தனது விகடத்தால் காப்பாற்றும் காட்சி வெளி. படுத்தப்பட்டது.

அடுத்து கௌரிரங்கராசன் அவர்கள் அச்சு இயந்திரமாற்றம், உற்பத்திச் சாதனங்களும் நாடக வடிவம் பற்றியும் குறிப்பிட்டார்கள். பிரசன்னா அவர்கள் நாடகக் கருவிகள் பற்றிக் குறிப்பிட்டதோடு இசை துவம்சம் செய்யப்பட மாட்டாத ஒன்று என்பதையும் வலியுறுத்தினார்.

சிவசங்கரி அவர்கள் புரட்சிக் கவி நாடகங்கள் பற்றியும் எடுத்துக் கூறினார். திரு. சி. ஜெயசங்கரின் குறிப்பைத் தொடர்ந்து திரு. சிறி கணேசன் அவர்கள் இலங்கைக் கலைஞர்களான வைரமுத்து, சொக்கலிங்கம் ஆகியோரைப் பற்றியும் பல்கலைக்கழக மட்டத்தில் கலை வளர்ச்சி பற்றியும் எடுத்துக் கூறினார்.

திரு. க. வில்வரத்தினம், அப்துல் ரகுமான், எம் யுவன், அழகிய பெரியவன், சிற்பி, பாலசுப்பிரமணியம் ஆகியோர் கவிதைகள் பற்றிய விவக்கக் கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள்.

ஜேர்மனியைச் சேர்ந்த திரு. கண்ணன் அவர்கள் பழைய ஓலைச் சுவடிகளை நிரந்தரமாக பாதுகாக்கவும் இலகுவில் படித்தறியவும் கூடிய கணணித்தொழில் நுட்பம் பற்றி எடுத்து விளக்கினார். சபையோரின் ஐயப்பாடுகளும் தெளிவுபடுத்தப்பட்டன.

நடிகர் நாசர் அவர்கள் சினிமாப் பாடல்கள் பற்றியும், வ. கீதா பெண்கள் இலக்கியம் பற்றியும், அ. மங்கை ஔவை, அம்மை ஆகியோர் கவிதை நடை பற்றியும் எடுத்துக் கூறினார்கள்.

கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல் என்ற பகுப்புக்களிலும் பொதுவாகப் தமிழ் இலக்கியம் என்ற தொகுப்பிலும் 'தமிழ் இனி - 2000' என்ற ஒலி, ஒளி நாடா இலக்கிய ஆர்வலருக்கு நல்விருந்தாக அமைந்திருந்தது.

வ. காந்திமதிநாதன்
**கல்வி உத்தியோகத்தர்**
கட். நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்.

# வெற்றிகரமான முனைவோர்

1. தன்னைத் தானே புரிந்து கொள்ளும் திறன், நேர்மை, அடக்கம் என்பன இருக்க வேண்டும். உமது உற்பத்திப் பொருளை வாங்கும் படி ஒரு வாடிக்கையாளரையும் கட்டுப்படுத்த இயலாது. நுகர்வோரை அரசராக மதிக்க வேண்டும். நோக்கங்கள் நேர்மையாக அல்லது ஓரிரு இலக்குகளைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

2. ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் உமது வியாபார நோக்கங்கள், இலக்குகள் அமைதல் வேண்டும். அந்த நோக்கங்களும், இலக்குகளும் சரியானதா? என்பதை அடிக்கடி மீளாய்வு செய்து கொள்ளல்வேண்டும். இலக்குகளும் வரவு செலவுத் திட்டமும் உமது நோக்கங்களை அடையக்கூடியதாக தயாரிக்கப்பட்டிருப்பதுடன் தேசிய அபிலாசைகளுக்கு உடன் பட்டதாகவும் இருக்க வேண்டும். இலக்குகளை அடைய முயற்சிக்க வேண்டும். அவ்விலக்குகளை அடிக்கடி மாற்றக் கூடாது. உமக்குரிய இயல்புகளை சக்தியை ஆழமான முறையில் மதிப்பீடு செய்ய வேண்டும். உமக்கிருக்கும் சக்தியின் படியே உமது வியாபாரத்தை விருத்தி செய்ய வேண்டும்.

3. உமது வியாபார பங்காளிகளைக் கவனமாகத் தேர்ந்தெடுக்கவேண்டும், அடிக்கடி அவர்களை சந்தித்து உரையாடும் சூழ்நிலையை தோற்றுவிப்பதோடு அவர்களுடன் சுமுகமாக பழக வேண்டும். குறைபாடுகளை நாகரீகமான முறையில் பகிர்ந்து கொள்ள வேண்டும் வியாபார நுணுக்கங்களை அறிந்து கொள்ளற் பொருட்டு பொருத்தமான தொழில் நுட்பங்களை தானாகவோ, பிறர் மூலமோ அல்லது உசாத்துணைவர்கள் மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம்.

4. உமது முகாமை நடவடிக்கைகளின் போது உண்மைத் தன்மையும் நேர்மையும் வெளிக்காட்டப்பட வேண்டும். உண்மையான தொழில் முயற்சிக்கு, பெறுபேறுகளுக்கு ஊக்கமளித்தல் வேண்டும். குறுகிய காலத்தில் ஏற்படும் இலாபங்களுக்காக நேர்மையின்மையே எக்காலத்திலும் வெளிப்படுத்தலாகாது. உமது பாவனையாளர்களுக்கு இலாபம் ஈட்டுவதன் பொருட்டு பழையான வழிமுறைகளை கற்றுத் தந்தால் அது சவாலாக முடியும்.

5. உமது வியாபார முயற்சிகள் பற்றி நன்றாக ஆய்வு செய்யுங்கள். அதில் முற்றாக உமது ஈடுபாட்டைக் காட்டுங்கள். உமது ஆய்வு முயற்சிகளின் போது இவ்வியாபாரம் நிச்சயமாக பயனளிக்கும் என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். உண்மையான ஆய்வு எதிர்காலத்தில் ஏற்படும் பிரச்சினைகளை இனங்காண உதவும். அவ்வறான ஆய்வுகள் பிரச்சினைகளை முன் கூட்டியே எதிர்கொள்ளவும் உதவும். உமது உற்பத்திப் பொருளை நுகர்வோர் கட்டாயம் ஏற்றுக்கொள்ளுவர் என்ற உறுதிப்பாடு ஒரு உற்பத்தியில் அவசியமாகும். பொதுச் சந்தையில் போட்டி போட்டு ஒரு பொருளை விற்பதை விட தெளிவான சந்தை இருப்பதை ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். ஒரு குறித்த வாடிக்கையாளர்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு அல்லது நம்பி ஒரு தொழிலில் ஈடுபடலாகாது.

6. உமது நடவடிக்கைகள் பற்றி அல்லது தீர்மானங்கள் பற்றி உமக்கு அறிந்த நண்பர்களுடன் ஆழமாக உரையாட வேண்டும். அவர்களுடைய அனுபவங்கள் உமது எண்ணங்களுக்கு பக்கபலமாக இருப்பதை உறுதிப்படுத்

சி. கோணேஸ்வரன
முகாமை உசாத்துணை ஆலோசகர்

தவும் சில முனைவோர் தங்களது தீர்மானங்களில் மிக நாட்டமாகவும், அதைச் செயற்படுத்துவதில ஊக்கமாகவும் இருப்பர். அவர்கள் அத்தீர்மானங்களை நிறைவேற்ற முடியுமா? என்பதை குறித்து ஆய்வு ஏதும்செய்வதில்லை.

7. உமது வியாபார நடவடிக்கைகள் உமது குடும்ப நடவடிக்கைகளைப் பாதிக்காத வகையில் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும் குடும்ப தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஈடுபாடு, கடும் உழைப்பு என்பன அதிகரிக்குமிடத்து வாழ்க்கையின் அம்சங்கள் பாதிக்கப்படக் கூடாது. அதே வேளை உமது உயர் விருப்பங்களை உடனடியாக ஏற்க வேண்டுமென எதிர்பார்க்க வேண்டாம் ஆரம்பத்திலேயே உயர் இலக்குகளை எட்ட முடியாது. உயர் இலக்குகள் எப்பொழுதும் படிப்படியாகவே கிட்டும், உமது வியாபார

> வெற்றிகரமான வியாபார நடவடிக்கைகளுக்கு உந்துதலாக இருக்கும் பதின்மூன்று அடிப்படை அம்சங்கள் தொடர்பாக முகாமை உசாத்துணை ஆலோசகர் சி. கோணேஸ்வரன் எழுதிய கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகிறது ஆர்

இலக்கை எய்த முடியாது எனத் தெளிவாகக் கண்டால் அவ்வியாபாரத்தை மூடிவிடுதல் நன்று. உமக்கு ஏற்பட்ட தோல்வி அடுத்த முயற்சியொன்றுக்கு வெற்றிப்படியாக அமையலாம்.

8. ஒரு பொருத்தமான வியாபாரத் திட்டமொன்றை ஏற்கனவே வகுத்துக் கொள்ளல் வேண்டும். ஓர் ஆலோசகரால் வரையப்பட்ட திட்டமாயின் அத்திட்டம் பற்றிய எல்லா விடயங்களையும் அறிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். இது உமக்கான திட்டமே என்பதை என்றும் மறந்து விடலாகாது. எப்பொழுதும் அளவுக்கு மீறிய எதிர்பார்க்கைகளை மேற்கொள்ளக் கூடாது. எதிர்பார்க்கப்படும் அளவு செலவுகளை விட குறைந்த செலவினை அடிப்படையாகக் கொண்டு திட்டங்களை வகுக்க முயற்சிக்க வேண்டும்.

9. உமது விற்பனை விலையை தெளிவாக வகுத்துக் கொள்ள வேண்டும். உமது விலை செலவுகளுக்கு ஈடுகட்டத்தக்கதாக இருக்க வேண்டும், அளவுக்கு மீறிய செலவுகளை உள்ளடக்கி அவற்றை சமன் செய்யக் கூடிய விலையை நிர்ணயம் செய்தல் ஆகாது. விலைகள் நிரந்தரமானதாக இருக்க பார்த்துக் கொள்ள வேண்டும். உமது உற்பத்தித்திறனை அதிகரிப்பதன் மூலம் பொருட்களுக்கான விலையை குறைக்க முடிந்தால் நன்று.

10. உமது முதலீட்டின் ஒரு பகுதியை சுயமாக ஈடுபடுத்துவதில் நாட்டம் செலுத்துக, வங்கிகள் எதிர்காலத்தில் உமது நடைமுறை முதலுக்கு தேவையான முதலை வழங்கும் என்று நம்பிக்கை கொள்ளல் ஆகாது. முனைவோர்களின் மூலதனம் மிகக் குறைவாக இருக்குமிடத்து கடன் வழங்கும் நிறுவனங்கள் போதிய உதவிகளை வழங்குமென்று நிச்சயப்படுத்தக் கூடாது. உமது நடைமுறை மூல

(9ம் பக்கம் பார்க்க)

## சோக்கிரடீஸ் கடைக்குப் போவது ஏன்?

பிரபல தத்துவஞானி சோக்கிரடீஸ் மிகவும் சிக்கனமானவர். காலில் செருப்புக்கூட அணிவதில்லை. ஆனாலும் அடிக்கடி கடைகளுக்குச் சென்று விற்பனைக்கு என்ன என்ன பொருட்கள் வைக்கப்பட்டிருக்கின்றன என்று பார்த்து விட்டு வருவார்.

ஒருநாள் இவரது நண்பர் ஒருவர் சோக்கிரடீஸைப் பார்த்து இதற்குரிய காரணத்தைக் கேட்டறிந்தார்.

அதற்கு சோக்கிரடீஸ் அங்கு கடைகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள பொருட்களில் எத்தனை பொருட்கள் இல்லாமல் என்றால் சீராக்க முடியும் என்று பார்த்துவிட்டு வரவே 'அடிக்கடி கடைத்தெருவுக்குப் போய் வருவதாகக் கூறினார்.

ஆன்மீகம் என்று கூறும்போது "உனக்கு என்ன தேவை என்று" அறிவது இல்லை "தேவையற்றது எது" என்று அறிந்து கொள்வதே யாகும்.

## ஜெய்ப்பூர்கால்

"ஜெய்ப்பூர்கால்" டாக்டர் பி. கே. செதி ( P.K.Setht ) என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது

டாக்டர் பி. கே. செதி வட இந்தியாவில் உள்ள ஜெய்ப்பூர் நகரில் சிறந்த எலும்பு சம்பந்தப்பட்ட சத்திரசிகிச்சை நிபுணராவர்

ஜெய்ப்பூர்கால் அலுமினியத்தினால் செய்யப்பட்டது. இது பார்வைக்கு சாதாரணகால் போலவே இருக்கும்.

## வெற்றிகரமான..

( 8ம் பக்கத் தொடர்ச்சி )

தனத்தினுடைய தேவை அதனை உரியமுறையில் பயன்படுத்தும் விதம் என்பவற்றிலும் மிகுந்த கவனம் செலுத்துக. வியாபார சுழற்சி வீதம் அதிகமாக இருப்பதை உறுதிப்படுத்துவதோடு தேவையற்ற இருப்பு இரும்பில் இருப்பதைக் கட்டுப்படுத்தவதுடன் இருப்பு மீதிகளைக் கட்டுப்படுத்துவதிலும் கணிசமான கவனத்தைச் செலுத்த வேண்டும்.

11. வியாபாரமொன்றை ஆரம்பிக்கும் பொழுது பொருத்தமான வியாபார அமைப்பா? என்பதையும் அதற்கான சட்டவரைபுகல் ஒழுங்கு முறையாக உள்ளதா என்பதையும் வரி அறவிடுவதற்கான பதிவேடுகள் ஒழுங்காக உள்ளதா என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். வியாபாரமொன்றினை நிறைவேற்றும் பொழுது படிப்படியாக அதனை நிறைவேற்ற முயற்சி செய்தல் நல்லது அதனால் பாரிய அளவிலான நட்டங்களைத் தவிர்க்க முடியும். பொருத்தமான இடம், பொருத்தமான அமைவிடம், பொருத்தமானபணியாளர்களுக்கான பயிற்சி என்பவற்றை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

ஒரு பொருளை அறிமுகம் செய்யும் பொழுது அல்லது வியாபாரத்தை ஆரம்பிக்கும் பொழுது அதனை முயற்சிக்கும் காலம் என்பர். சரியான பொருட்கள் தான்என்பதில்வாடிக்கையாளர்களும் பொருத்தமான வியாபாரமா? என்பதில் முனைவோரும் நாட்டம் காட்டுவர். இச்சமயத்தில் ஒரு உற்பத்தியாளன் அல்லது வியாபாரியின் கவனம் போதியதாக இருக்க வேண்டும். உமது வியாபாரத்திட்டம் நீர் ஒரு இடத்தைச் சென்றடைவதற்கான பாதை வழிகாட்டி போன்றது என்பதை எவரும் மறந்துவிடலாகாது

உமது வியாபாரத்தின் தன்மைகளை அறிந்து அதற்கேற்ப கணக்கு வைப்புக்களையும், கணக்கியல் தாற்பரியங்களையும் அறிந்து புத்தகங்களை வைத்து வர நடவடிக்கை எடுக்க வேண்டும். உமது நிறுவனத்தின் காசோட்ட நிலை பற்றியும் தரக்கட்டுப்பாடு பற்றியும் எப்பொழுதும் கவனமாக இருக்க வேண்டும், உமது நிறுவனத்தின் முகாமைத் தகவல் விடயங்களைத் தெளிவான வகையில் சுருக்கமாகவும், செலவு குறைவான முறையிலும் வைத்துக் கொள்ளவும்.

12. உமது நிறுவனத்தின் பணியாளர்களை நிர்வகிக்கும் முகாமை நடைமுறைகளையும், பணியாளர்கள் தமக்குள் குழுவாக இணைந்து செயற்படுகிறார்களா? என்பதையும் உறுதிப்படுத்துங்கள். ஒரு ஆரோக்கிய முள்ள வேலைக் குழாமொன்றை உருவாக்க உங்கள் பங்களிப்பைச்செலுத்துங்கள். ஒரு முனைவோருக்கு வியாபாரத்தில் எல்லா அணுகு முறைகளும் தெரிந்து இருத்தல் வேண்டும். ஒவ்வொரு அங்கங்களதும் ஆணிகளையும், இறுக்கிகளையும் ( *Nuts and Bolts* ) தெளிவாக தெரிந்திருத்தல் வேண்டும்.

13. நீர் உமது நிறுவனத்தை வெற்றிகரமாக ஆரம்பித்து விட்டதாக கருதினாலும் அவ்வியாபாரத்தின் நிலை பற்றி குறைந்தது 3 மாதத்திற்கு ஒரு தடவையோ அல்லது 6 மாதத்திற்கு ஒரு தடவையோமுன்னேற்றங்களைப் பரிசிலனை செய்யவும். உமக்கு உதவி வழங்கும் நிறுவனங்களுடன், சுமுகமாகப் பழகுவதோடு,எச்சந்தர்ப்பத்திலும் அவர்களின் உதவியைப் பெற ஆயத்தமாக இருக்க வேண்டும்.

## நோய்களில் இருந்து...

( 5ம் பக்கத் தொடர்ச்சி )

ஆனால் இந்த வகை எண்ணெயைப் பூசி குழந்தைகளுக்கு மசாஜ் செய்வதால் எந்தப்பயனுமேகிடையாதாம்.

டெல்லியிலுள்ள மருத்துவ விஞ்ஞான கழகத்தினைச்சேர்ந்தகுழந்தைகளுக்கான சிறப்பு மருத்துவர்கள் ஆய்வு செய்து கண்டுபிடித்து மேற் கண்ட செய்தியை அறிவித்துள்ளனர். திடகாத்திரமான 6 வாரமான குழந்தைகளை தலா 25 வீதம் நான்கு பிரிவாக பிரித்து முறையே அவர்களுக்கு பிரபல வெளிநாட்டு நிறுவனம், இந்தியாவிலுள்ள பிரபல ஆயுர்வேத நிறுவனம் தயாரித்துள்ள மசாஜ் எண்ணெய் கடுகு எண்ணெய் மற்றும் எந்த எண்ணெய்யும் இல்லாமல் வெறும் கையாலும் மசாஜ் செய்யப்பட்டது.

இதில் மற்ற குழந்தைகளை விட வெறும் கையால் மசாஜ் செய்யப்பட்ட குழந்தைகளே நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பது தெளிவாக கண்டுபிடிக்கப்பட்டது.

அந்த குழந்தைகளுக்கு இரத்த ஓட்டம் சீராக இருப்பதுடன் மசாஜிற்குப் பின் மற்ற குழந்தைகளை விட நன்கு தூங்கியதாகவும் ஆய்வில் கண்டறியப்பட்டது.

ஆய்வினை மேற்கொண்ட குழுவின் தலைவரான டாக்டர் அகர்வால் டாக்டர் தோற்றத்துடன் அல்லது டாக்டர் கூறுகிறார் என்னும் வகையில் விளம்பரப் படுத்தப்படும் பன்னாட்டு நிறுவனங்கள் அறிமுகப்படுத்தும் குழந்தைகளுக்கானமசாஜ் எண்ணெய் குறித்து இதுவரை இந்தியாவில் எந்த விதமான ஆய்வும் செய்யப்படவில்லை" என்கிற அதிர்ச்சியான தகவலையும் தந்துள்ளார்.

# மிளகாய் செய்கையின் போது இலைச்சுருள் நோயை கட்டுப்படுத்தும். பீடைக்கட்டுப்பாட்டு முறைகள்.

உலர் வலயத்தில் ஜூலை - ஆகஸ்ட் மாதங்களில் கடும் வெப்ப நிலை நிலவும் இக்காலப்பகுதியில் நீங்கள் செய்கை பண்ணியுள்ள மிளகாய்ப் பயிர்களில் பனிப்பூச்சிகளின் தாக்கம் ஏற்படலாம். பனிப்பூச்சிகளின் தாக்கத்தினாலேயே பெரும்பாலான மிளகாய்த் தோட்டங்களை கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவற்றின் தாக்கத்தினால் தப்பிப் பிழைத்த தோட்டங்களிலும் போதியளவான விளைச்சலைப் பெற முடியாதுள்ளது. எனவே தகுந்த நேரத்தில் இப்பூச்சிகளைக் கட்டுப்படுத்துவது மிக அவசியமானதாகும்.

## பனிப்பூச்சிகள் ஏன் பல்கிப் பெருகின ?

இப்பூச்சியின் தாக்கம் பெருகியமைக்கு பல காரணங்கள் உள்ளன. தொடர்ச்சியாகமிளகாயைச்செய்கை பண்ணச் சிபாரிசு செய்யப்படாத நாசினிகளை விசிறுவதோடு, சிபாரிசு செய்யப்பட்ட நாசினிகளை சரியான அளவில் கலவை செய்யாது நினைத்தவாறு அடிக்கடி விசிறுதல் என்பனவாகும். இதன் காரணமாகபனிப்பூச்சிகள் பீடை நாசினிகளுக்கு எதிராக விருத்தியடைந்துள்ளன; இவற்றினால் பனிப்பூச்சிகளின் தாக்கம் மேலும் அதிகரித்துள்ளது. எனவே பனிப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகும்.

## பாதுகாப்பு நடவடிக்கைகள் எவை ?

1. பனிப்பூச்சிகள் தொற்றுவதைத் தவிர்த்தல்.
2. ஆரோக்கியமான செடிகளை வளர்த்தல்.

( 11-ம் பக்கம் பார்க்க )

---

# மனித வள முகாமைத்துவத்தில்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

- புதுமைகளைக் கண்டு பிடிக்கவும் புதுமைகளைப் புகுத்தவும் உதவும்.
- குழுக்களாகப்பணிபுரியும்பண்பை வழங்கும்.
- பொறுப்புக்களை ஏற்கும் மன நிலையை வளர்க்கும்.
- தீர்மானமெடுக்கும் ஆற்றலை வளர்க்கும்.
- சிறப்பான மனோநிலையை ஊழியர்களிடையே ஏற்படுத்தும்,
- தொடர்பாடல் திறன் வளர்க்கப்பட உதவும்.
- புதியவற்றைஉருவாக்கும் திறனை வளரச் செய்யும்.
- ☆ தரம் குறைந்த முகாமையாளரின் கீழ் பணியாற்றுவதற்கான சம்மதத்தை வழங்கும்,

என்ற வகையில் தொழில் விருத்தியானது பலவகையான நன்மைகளைப் பெற்றுத்தரும். இதன் காரணமாகவே தொழில் விருத்தியானது சிறிய நிறுவனங்களாலும் பாரிய நிறுவனங்களாலும் விரும்பி மேற்கொள்ளப்படுகின்றது.

1. தொழில்தருனருக்கு ஊழியர்களைக் கவர்ச்சியுள்ளவர்களாக மாற்றுதல்.
2. எத்தகைய தொழில்களுக்கான வாயில்கள் திறந்துள்ளன என வழிகாட்டல்
3. தொழில்களுக்கு இருக்கக் கூடிய சரியான படிமத்தை ( *Image* ) வழங்குதல்.
4. எந்தவொரு தொழிலுக்குமுள்ள பலங்களையும் பலவீனங்களையும் எடுத்துக் காட்டல்.
5. தொழிலுக்கான இட அசைவுகள் பற்றித் தெளிவானகருத்துக்களை ஏற்படுத்துதல்.
6. தொழில் வாய்ப்புக்கள் தொடர்பான வரவுகளையும் தகவல்களையும் வழங்குதல்.
7. தொழில் முன்னேற்றத்துக்கான கற்கை நெறிகளைத் தெரிவு செய்ய உதவுதல்.

போன்ற வகையில் தொழில் வழிகாட்டும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. தொழில் விருத்திக்கான நடைமுறையில் தொழில் வழிகாட்டல் பிரதான இடத்தை வகிப்பதாகக் கொள்ள முடியும்.

## 3.0 தொழில் விருத்திக் கட்டங்கள் Stages in Career Develop - ment )

தொழில் விருத்தி சம்பந்தமாக தொழிலாளர் அனுபவிக்கும் பல்வேறு நிலைகளை தொழில் விருத்திக் கட்டங்கள் என அழைப்பர். தொழில் விருத்தியுடன் மூன்று கட்டங்கள் சம்பந்தப்பட்டிருப்பதனைக் காண முடியும்.

## 3 1 தொழில் நிலைபெறல் ; ( Career Establishment )

தொழில் விருத்தி தொடர்பாக இடம்பெறும் ஆரம்பக்கட்டம் இதுவாகும். இந்த நிலையில் ஊழியர்கள் பல பண்புகளைக் கொண்டிருப்பர். குறிப்பாக

- வேலை தேடுதல்.
- வேலையைப் பொறுப்பேற்றல்.
- சக ஊழியர்களைச் சந்தித்தல்.
- மேலதிகாரி அறிமுகமாதல்.
- இடமாற்றங்களைப் பெறுதல்.
- பதவியுயர்வுகளைப் பெறுதல்.
- பயிற்சிகளைப் பெறுதல்.
- கடின உழைப்பினை வழங்குதல்.

போன்றன தொழில் விருத்தியின் ஆரம்பக் கட்டங்களாகும். இக்கட்டம் தொழில் விருத்திக்கான அடிப்படையை வழங்குவதாகக் கொள்ளப்படுகின்றது.

நிறுவனங்களிலே தொழில்விருத்தியானது, முக்கிய பணியாக விருத்தி செய்யப்பட்டுள்ளது. ஊழியர்களுக்கிடையே தொழில் விருத்தி பற்றிய அறிவு வளர்க்கப்படுமாயின் எல்லோருமே தொழில் முன்னேற்றத்திற்கான வழிகளை நாடுவர் தொழிலின் பெறுபேறு உயர்த்தப்படுமாயின் அது முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தும்.

ஒவ்வொரு ஊழியரும் தனது தொழில் வாழ்க்கையிலே, தொடர்ச்சியான முன்னேற்றத்தை எதிர்பார்க்கும் காரணத்தால் தொழில் விருத்தியில் அக்கறைகாட்டுகின்றனர். வேலையில் தன்னிச்சையாகவே, ஊக்குவிப்பு இடம்பெறுவதற்கு, தொழில்விருத்தி காரணமாகின்றது. வேலையின் அளவிலும், தரத்திலும் உயர்வு உண்டாக்கி அது உயர் உற்பத்தித்திறன் உருவாக வாய்ப்பினைத்தரும் நிறுவனங்களில் உயர் வேலைத்திருப்தியும் ஊக்குவிப்பும் அர்ப்பணிப்பும்ஏற்பட்டு சுற்று வட்டத்தில் தொழில் விருத்தியானது நிறுவனங்களின் வளர்ச்சிக்கு உதவுவதனைக் காண முடியும். இதன் காரணமாகவே தற்காலத்து நிறுவனங்கள் தொழில் விருத்தியில் அக்கறை காட்டுகின்றன.

க. தேவராசா
தலைவர் வணிகத்துறை,
யாழ் பல்கலைக் கழகம்

# கட்டைவேலி - நெல்லியடி பல நோ. கூ. சங்கம் 05 . 10 - 2002ல் நடத்திய முதியோர் தினவிழா

எமது சங்கத்தினால் வருடா வருடம் கொண்டாடப்படும் முதியோர் தினம் இம்முறையும் சங்கத் தலைவர் திரு. த. சிதம்பரப்பிள்ளை ஓய்வு பெற்ற ஆசிரியர் தலைமையில் திரு. வே. கார்த்திகேசு அவர்களின் நற்சிந்தனை வாசித்தலுடன் ஆரம்பமாகியது:

தலைவர் தமது தொடக்க உரையில் முதியோர்கள் பற்றியும், முதியோர் தினவாரத்தின் சிறப்புக்கள், நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டமுறை பற்றியும் எடுத்துரைத்தார். தொடர்ந்து தலைவர் அவர்களின் ஒழுங்கமைப்பில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

திரு. சா. தணிகாசலபதி அவர்கள் ' வயோதிபகால நடவடிக்கைகளை முன்கூட்டியே திட்டமிடல் ' என்பது பற்றிய கட்டுரையை வாசித்தார். தொடர்ந்து திரு. வே. சேனாதிராசா ( இளைப்பாறிய அரச உத்தியோகத்தர் ) கருத்துரை வழங்கினார்கள். மழலை அமுதம் நிகழ்ச்சியில் ' நாடு, காகம், பூ. என்பன பற்றிய பாடல்கள் ஒலிக்கப்பட்டன. செல்வி இ. செல்வமதி அவர்கள் ' நாவலர் மணிமண்டபம் அமைந்த காணியை இந்து சமய விவகார அமைச்சுப் பொறுப்பேற்றது சம்பந்தமான இந்துசாதனச் செய்திக் கட்டுரையையும் செல்வி க. கீதா அவர்கள் ' உடல் சோர்வுக்கு வயது முக்கிய காரணமன்று ' என்னும் விடயம் பற்றிய கட்டுரையையும் வாசித்தார். திரு. ம. அரியநாயகம் ( இளைப்பாறிய அரச உத்தியோகத்தர் ) யோகாசனப் பயிற்சியின் நலன்கள் பற்றியும் தன்னுடைய அனுபவங்கள் பற்றியும் எடுத்துக்கூறினார்.

கண்ணதாசன் பாடல்களில் விஞ்சி நிற்பது காதலா, தத்துவமா என்னும் விடயம் பற்றிய பட்டிமன்ற நிகழ்ச்சி ஒலி நாடாவில் ஒலிக்கப்பட்டது.

செல்வி. இ. வினோஜிதா 'காலம் வழங்கிய கௌரவம் முதுமை' என்னும் விடயம் பற்றிய கட்டுரையையும் திரு. இ. ஞானபாஸ்கரன் முதியோர்களை வாழ்த்தும் வகையில் அமைந்த ' நீடுழி நீங்கள் வாழ்க ' என்ற கவிதையும் அடுத்து செல்வி வி. ஜெயதீபா அவர்கள் முதியோர் நமக்குச் சுமையல்ல ' என்ற கட்டுரையையும் வாசித்தார்கள்.

ஒரு குடும்பத்தை மகிழ்விப்பது மகனா ? மகளா ? என்ற பட்டிமன்ற நிகழ்வு காட்சியும் காண்பிக்கப்பட்டது. அடுத்து 'முதுமையில் உளநலம்' என்னும் விடயம் பற்றிய கட்டுரையை செல்வி. க. பவானி அவர்கள் வாசித்தார். கண்ணதாசனின் ' சமரசம் உலாவும் இடமே ' என்ற பாடல் சங்கக் கல்வி உத்தியோகத்தர் திரு. வ. காந்திமதிநாதனால் பாடப்பட்டது. அடுத்து தமிழ்இனி 2000 என்ற ஒலி ஒளிப்பேழை திரையிடப்பட்டது.

நிகழ்ச்சியை திரு. செ. சதானந்தன் ஆசிரியர் திரு. எஸ். வீரசிங்கம் சமாதான நீதவான், திரு. வ. வீரவாகு ஆசிரியர் ஆகியோர் மதிப்பீடு செய்து நிகழ்த்திய உரை முதியோர் மனதில் ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியதாகத் தெரிவித்தார்கள்.

வ. காந்திமதிநாதன்
கல்வி உத்தியோகத்தர்

---

# மிளகாய்ச்செய்கையின் போது...

( 10-ம் பக்கத் தொடர்ச்சி)

3 சரியான முறையில் பீடைகளைக் கட்டுப்படுத்தல்.

4. பனிப்பூச்சிகள்பரவுதல், வளர்ச்சி என்பனவற்றிற்கு உதவும் காரணிகளை இல்லாதொழித்தல் என்பனவே பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆகும்.

பாதுகாப்பு நடவடிக்கைகளால் பனிப்பூச்சிகள் தோற்றுவதைத் தவிர்த்துக் கொள்வதற்கும், செடிகளைப் பராமரிக்கவும் நீங்கள் தற்போது செய்ய வேண்டியவற்றில் திணைக்களத்தால் சிபாரிசு செய்யப்பட்ட பசளைகளை மாத்திரமே சிபாரிசு செய்யப்பட்ட நேரங்களில் இடுவது முக்கியமானதாகும்.

மேலதிகமாக பசளைகளை இட வேண்டாம் நீர்முகாமைத்துவத்தையும் முறையாக மேற்கொள்ள வேண்டும். களைகள் பெரும்பாலான பீடைகளுக்குவிருந்து வழங்கியாகத் தொழிற்படும்.

எந்தவொரு பயிரிலும் பீடைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் களைகள் பெரும்பாலான பீடைகளுக்கு விருந்து வழங்கியாகத் தொழிற்படும்

எனவே களை இல்லாது மிளகாய் பயிரைப் மராமரிப்பது அத்தியாவசியமானதாகும்.

## பீடைக்கட்டுப்பாட்டு முறைகள் ;

எந்தவொரு பயிரிலும் பீடைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்னர் குறிப்பிட்ட பயிர் எப்பீடையால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெளிவாக அறிந்து கொள்ளவேண்டும் பனிப்பூச்சிகளுக்கு இது விதிவிலக்கல்ல. பனிப்பூச்சியினால் பாதிக்கப்பட்ட மிளகாய்ச் செடியின் இலை ஓரம் மேற்புறமாக சுருண்டு காணப்படும், முதிர்ச்சியடைந்த இலையின் மத்திய நரம்பு மஞ்சள், கபில அல்லது வெண்கல நிறமாக மாறும், தாக்கம் மோசமாக மாறும்போது பற்றையாக காணப்படும் இவ்வறிகுறிகளினால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை நீங்கள் உறுதி செய்து கொள்ள முடியும். இதன் பின் சிபாரிசு செய்யப்பட்டவாறு விசிறுவது மிக முக்கியமானதாகும்.

## இரசாயனக் கட்டுப்பாட்டு முறைகள்

பின்வரும் சிபாரிசு செய்யப்பட்ட இரசாயனங்களை மாத்திரம் சிபாரிசு செய்யப்பட்ட அளவில் விசிறல் வேண்டும்.

பிப்ரோனில் இமிடகுளோபிறிட், லுபெறியுரோன், கார்போசல்பான், புரோத்தியோபொஸ் பொசலோன், அசிபேற். பெனோபுகார்ப். மேற் குறிப்பிட்டவை அனைத்தும் பொதுப் பெயர்களாகும்.

இவை பல வர்த்தகப் பெயர்களில் அழைக்கப்படலாம். எனவே சந்தையில் கிடைக்கும் நாசினியொன்றை விசிறவும். நாற்று நட்டு 10-14 நாட்கள் இடைவெளியில் விசிறவேண்டும். இவற்றில் புரோத்தியோபொஸ் எனும் நாசினியை விசிறி 21 நாட்களின் பின்னரே அறுவடை செய்ய வேண்டும். ஆனால் ஏனைய நாசினிகளை விசிறினால் 14 நாட்களின் பின் அறுவடை செய்யலாம்.

Registered as a News paper at the G. P. O SriLanka Under / No K. V. J. 59 / 87

ஐக்கியதீபம்

ஐப்பசி - 2002

# யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையில் கணனிப் பயிற்சி நெறி ஆரம்பம்

யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச் சபையினால் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான கணனிப் பயிற்சி நிலையத்தை வட கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. எஸ். சுப்மணியசர்மா கடந்த 18ம் திகதி வெள்ளிக்கிழமை சம்பிரதாய பூர்வமாக திறந்து பயிற்சி நெறியை ஆரம்பித்து வைத்தார்.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. பெ. கனகசபாபதி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் வடகிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் எஸ். சுப்பிரமணிய சர்மா, யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள் திரு. செ கனகசபாபதி (அபிவிருத்தி) திரு எஸ். கணேசமூர்த்தி (ப. தெ. வளம்) திரு. பி. சிவலிங்கம் (எண்பார்வை) தலைமைக் காரியாலயகூட்டுறவு அலுவலர் திரு. எஸ் திருச்செல்வம், யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபை உபதலைவரும் யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத் தலைவருமான திரு ச. முருகவேசன் கூட்டுறவுப் பயிற்சிக்கல்லூரி அதிபர் பொ. சண்முகசுந்தரம் வட மாகாண தெ. ப. பொ. கூ ச. சமாச கல்வி உத்தியோகத்தர் வே. தவப்புதல்வன் ஆகியோர் குத்து விளக்கினை ஏற்றி வைத்தனர்

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைச் செயலாளர் எஸ். சிவசுப்பிரமணியம் வரவேற்புரை நிகழ்த்தினார். கூட்டுறவுக் கல்லூரி அதிபர் பொ. சண்முகசுந்தரம் நன்றி கூறினார்.

கணனிப் பயிற்சி பெறும் பணியாளர்களுக்கு பயிற்சி வழங்கும் போதனாசிரியர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டார்கள்.

## கிராமமக்களின் வாழ்க்கைத்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டுறவையும் உன்னதமான கூட்டுறவாளர்களையும் காண முடிந்தது

இதன் காரணமாகத்தான் இச்சங்கம் தனக்கென ஒரு கட்டிடத்தை அமைத்து இன்று திறப்புவிழாவினைக் கண்டு ஏனைய சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்கிறது என்றுகூறினார்.

யாழ். மாவட்ட கூட்டுறவு சபைத் தலைவர் திரு. பெ. கனகசபாபதி பேசும்போது கூறியதாவது.

வடமராட்சி மக்களைப்பொறுத்த வரையில் அவர்கள் கூட்டுறவு இயக்கத்தைப் பற்றிய தெளிந்த சிந்தனை உடையவர்கள். மக்களுடைய தேவைகளை அறிந்து செயற்படக்கூடியவர்கள் பல அரசியல் தலைவர்களையும், கூட்டுறவாளர்களையும் கல்விமான்களையும், அறிஞர்களையும், புத்திஜீவிகளையும் எமது மண்ணுக்குத் தந்தவர்கள்.

வரலாற்று சிறப்பு மிக்க வடமராட்சியில் சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தை ஸ்தாபித்து கிராமிய மக்களின் நல்லாதரவைப் பெற்று 14 வருட வளர்ச்சியின் பின் தனக்கென ஒரு சொந்தக் கட்டிடத்தை ஸ்தாபித்திருப்பது பாராட்டுக்குரியதாகும் எனவே யாழ். மாவட்டத்தில் உள்ள ஏனைய சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்கங்களும் முன்னுதாரணமாகக்கொண்டு இச்சங்கத்தை செயற்பட வேண்டும்என்றுகேட்டுக்கொண்டார்.

பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் திரு. சி தியாகலிங்கம் உரையாற்றும் போது கூறியதாவது ;

கிராமிய பொருளாதாரத்தை வளர்க்கவும், அம்மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் கடன் திட்டங்களை வகுத்து அவற்றை நடை முறைப்படுத்துவதில் இச் சங்கம் முக்கிய கவனமெடுக்க வேண்டுமென்றுகேட்டுக்கொண்டார்.

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்க பருத்தித்துறை பிராந்திய சபைத் தலைவர் திரு. ம செபஸ்தியன் உரையாற்றும் போது; சதாவதானி கதிரவேற்பிள்ளை சிக்கனகடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் சிறப்பான செயற்பாடுகளைப் பாராட்டிப் பேசினார்

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் திரு. சு. திருச்செல்வநாயகம் உரையாற்றும் போது, புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அயல் சங்கமான சதாவதானி கதிரை வேற்பிள்ளை சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தினர்களை அங்கத்தவர்களாக கொண்டு இருப்பதினால், அதன் சேவையை எம்மக்கள் பெற்று வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும் என்று கூறினார்.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் செயலாளர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் பேசுகையில்; சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கத்தினரின் அயராத ஒன்றிணைந்த செயற்பாட்டின் மூலம் தமது சொந்தக் கட்டிடத்தில் இன்று கால்பதித்து நிற்பதையிட்டுச் கூட்டுறவாளர்கள் பெருமைப்பட வேண்டும். இச்சங்கத்தினர் தமது அங்கத்தவர்களுக்குச் செய்து வரும் சேவை பாராட்டுக்குரியதாகும் என்று கூறினார்.

செயலாளர் க. இராமச்சந்திரா நன்றியுரை கூறும்போது, சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கனகடனுதவு கூட்டுறவுச்சங்கம் தனக்கென ஒரு புதிய கட்டிடத்தை அமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை அச்சகத்தில் அச்சிட்டு இல 12, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள வீரசிங்கம் மண்டபத்தின் 2ம் மாடியில் இயங்கும் யாழ். மா. கூ சபையினரால் 2002ம் ஆண்டு ஐப்பசி மாதம் வெளியிடப்பட்டது.